DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பொன்னியம்மாள் | Caste | : |
| Husband Name | : | பாண்டியன் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **22.06.2026.**

**PW - 13**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம், வேலங்காட்டில் குடியிருக்கிறேன். அ.சா.11 ஆறுமும் எனது தந்தை. அ.சா.12 அலங்காரம் எனது தாயார். சாட்சி எல்லம்மாள் எனது அக்கா. வழக்கில் இறந்துபோன பிரபு எனது தம்பி. ஆஜர் எதிரியை தெரியும். பிரபுவிற்கு சித்ரா என்பவருடன் முதலில் திருமணம் நடந்தது. அவர் பிரபுவை பிரிந்து சென்றுவிட்டார். பின்பு பிரபு எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். என் தம்பி பிரபு இறப்பதற்கு முன்பு முசிறிக்கு அருகே உள்ள செங்கல் சூளையில் வேலை செய்தார். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு என் மகள் அபிநயாவிற்கு மருவத்துாரில் திருமணம் வைத்திருந்தேன். எதிரி குழந்தைகளுடன் அங்கு வந்தார். பிரபு வரவில்லை. எங்கே என்று கேட்டதற்கு, பிரபு தங்களை மட்டும் அனுப்பிவைத்ததாக சொன்னார். அதன்பிறகு சந்தேகப்பட்டு எதிரி ரேகாவிடம் பிரபுவிற்கு என்ன ஆனது என்று கேட்டோம்.

எதிரி, நானே ஆளை வைத்து ஆற்றில் அடித்து போட்டுவிட்டதாகவும், அனாதை பிணமாகவும் கிடந்ததாக சொன்னார். என் தம்பி பிரபு நெஞ்சில் சித்ரா என்ற பெயரை பச்சைக் குத்தியிருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் விசாரித்தபோது நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன். நான் முதல் விசாரணையில் சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு என் மகள் அபிநயாவிற்கு மருவத்தூரில் திருமணம் வைத்திருந்தேன் என்றும், எதிரி குழந்தைகளுடன் அங்கு வந்ததாகவும், பிரபு வரவில்லை என்றும், எங்கே என்று கேட்தற்கு, பிரபு தங்களை மட்டும் அனுப்பிவைத்ததாக சொன்னார் என்றும், அதன்பிறகு சந்தேகப்பட்டு எதிரி ரேகாவிடம் பிரபுவிற்கு என்ன ஆனது என்று கேட்டோம் என்றும், எதிரி, நானே ஆளை வைத்து ஆற்றில் அடித்து போட்டுவிட்டதாகவும், அனாதை பிணமாகவும் கிடந்ததாக சொன்னதாகவும் சொல்லும் விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. அவ்வாறு எதிரி எங்களிடம் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி இறப்பிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் தம்பி எப்படி இறந்தார் என்பதே எங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.